நாமல்ஓயா பிரதேச சபை - 2022

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நாமல்ஓயா பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான செலவினக் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நாமல்ஓயா பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாக மற்றும் நியாயமாக வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நான் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்தை வெளிப்படுத்துகின்றேன்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு செய்யப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபையின் நிறுவனம் செயற்படுகின்றதா என்பதும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா என்பதும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) பிரதேச சபையின் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்தை ஒத்திருந்தன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(i)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் கடந்த வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் முன்வைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டுக்குரிய கடை வாடகை வருமானம் ரூபா 223,215 ஆல் அதிகரித்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது இப் பிழை திருத்தம் செய்யப்படும். | சரியாகக் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய ரூபா 236,958 தொகையான விளம்பர பலகை வருமானம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (இ) | அபிவிருத்தி கடன்கொடுத்தோர் மீதி மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,687,040 ஆல் குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஈ) | பொல்வத்த கடைகளை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்திற்காக செலுத்தப்பட வேண்டிய ரூபா 453,000 தொகை இரண்டு தடவைகள் அபிவிருத்தி கடன்கொடுத்தோரின் கீழ் குறிப்பிடப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |

| | | |
|---|---|---|
| (உ) பிராந்திய அபிவிருத்தி உதவி செயற்திட்டத்தின் கீழ் பரகஹகலே கலாச்சார நிலையத்திற்கு அருகாமையில் சிற்றுண்டிச்சாலை மற்றும் மலசலகூட முறைமையினை நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்ட ரூபா 4,190,158 பெறுமதி மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஊ) மீளாய்வாண்டின் நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களுடன் தொடர்புடைய பெறவேண்டிய முத்திரைத் தீர்வை வருமானம் இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் நிலுவையாக உள்ள முத்திரைத் தீர்வை வருமானம் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 365,793 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |

### 1.6.2 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது ஏடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிதி மீதிக்கும் வருமானம்/ மானியத்திலிருந்து மூலதன முதலீட்டுக் கணக்கிற்கான பங்களிப்பின் மீதிக்கும் இடையில் ரூபா 11,509,642 பொருந்தாதுள்ளது. | 2023 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது இப் பிழை திருத்தம் செய்யப்படும். | பொருந்தாததற்கான காரணங்கள் ஆராயப்பட்டு சீர்செய்யப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் வருமானங்களை மிகைத்த செலவினம் ரூபா 40,005 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினங்களை மிகைத்த வருமானம் ரூபா 450,291 ஆகும்.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| உள்ளுராட்சி சபைகளிற்குச் சொந்தமான இரண்டு வங்கிக் கணக்குகள் தொடர்பான வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களில் நீண்டகாலமாக முன்கொண்டுவரப்பட்டிருந்த ரூபா 28,886 தொகையான 03 மீதிகளைத் தீர்ப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆளுநரின் அங்கீகாரம் கோரப்பட்ட போதிலும், தேவையான அறிவுறுத்தல்கள் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை . மீண்டும் கடிதமொன்றை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. | மீதியை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | வருமான மூலம் | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | டிசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | டிசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 350,000 | 161,500 | 161,500 | - | 206,000 | 222,450 | 222,450 | - |
| (ii) | வாடகை | 4,173,540 | 1,859,264 | 1,878,272 | 3,100 | 2,502,890 | 3,049,672 | 3,027,565 | 22,108 |
| (iii) | உத்தரவுப்பத்திரக் கட்டணம் | 837,000 | 393,945 | 393,945 | 22,505 | 666,000 | 507,085 | 484,580 | 22,505 |
| (iv) | ஏனைய வருமானம் | 3,425,505 | 1,563,614 | 1,563,614 | 15,008 | 565,045 | 2,117,236 | 2,117,236 | 15,008 |
| (v) | கூட்டுத் தொகை | 8,786,045 | 3,978,323 | 3,997,331 | 40,613 | 3,939,935 | 5,896,443 | 5,851,831 | 59,621 |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | உள்ளூராட்சி சபையின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 196,526,918 தொகையான நிலையான சொத்துக்களின் பெறுமதி ஒவ்வொரு உருப்படியின் பிரகாரம் பெறுமதிகளை பதிவுசெய்வதன் மூலமாக நாளதுவரையாக நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | தனித்தனியாக புதிய ஏடுகள் தயாரிக்கப்படும். | நிலையான சொத்துப் பதிவேடு பெறுமதிகளை பதிவுசெய்வதன் மூலம் நாளதுவரையாக்கப்பட வேண்டும். |
| (ஆ) | உள்ளூராட்சி சபையின் கட்டிடங்கள் அமைந்துள்ள காணியின் பெறுமதி, 15 மயானங்கள் மற்றும் 07 விளையாட்டு மைதானங்களின் பெறுமதி என்பன இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் பெறுமதியைக் கண்டறிந்து கணக்கீடு செய்வதற்கு ஒரு குழு நியமிக்கப்படும். | பெறுமதிகள் இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டில் நன்கொடைகளாகப் பெறப்பட்ட 20 பொருள் உருப்படிகளின் பெறுமதி இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | இது எதிர்காலத்தில் கணக்கீடு செய்யப்படும். | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | உள்ளூராட்சி சபைக்குச் சொந்தமான உழவு இயந்திரம் - பெட்டி (tractor-tailor) ஒன்றின் பெறுமதி இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | உழவு இயந்திரப் பெட்டி ஏறத்தாழ 1994 ஆம் ஆண்டில் பெறப்பட்டது, எனவே இது குறித்து சபையிடம் எந்த தகவலும் காணப்படவில்லை, எனவே சபையால் அதைக் கணக்கீடு செய்ய முடியவில்லை. | -மேற்படி- |
| (உ) | சபையின் வசம் உள்ள 03 பழுதுபார்க்க முடியாத வாகனங்கள் 07 முதல் 23 ஆண்டு காலமாக விளைவற்றிருந்தன. | வாகனத்தை ஏலமிடுவதற்கான உரிமை சபைக்கு மாற்றப்பட்டிருக்காததுடன் அது குறித்து பிரதிப் பிரதம செயலாளர் அலுவலகத்துக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | அவை சம்பந்தப்பட்ட நிறுவனங்களிற்கு வழங்கப்பட்டு ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டும். |
| (ஊ) | 05 வாகனங்களின் உரிமைத்துவத்தை சபையின் பெயருக்கு சபை பெற்றுக்கொண்டிருக்கவில்லை. | வாகன உரிமைத்துவம் மாற்றப்பட்ட போதிலும் இன்னும் வழங்கப்படவில்லை. | வாகனங்களின் பதிவு உரிமை சபையின் பெயரிற்கு மாற்றப்பட வேண்டும். |

### 3.2 மனித வளங்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | ஊழியர் கடன் பதிவேட்டின் பிரகாரம் இடமாற்றம் செய்யப்பட்ட இரண்டு உத்தியோகத்தர்களின் 02 கடன் மீதிகள் 11 முதல் 16 ஆண்டு காலமாக அறவிடப்படாமல் இருந்தமை அவதானிக்கப்பட்டது. | சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு கடிதங்கள் மூலம் தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும் இதுவரை அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவையாக உள்ள கடன் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதியில் சபையில் 08 வெற்றிடங்கள் காணப்பட்டன. | இது குறித்து மாதாந்த அறிக்கைகள் மூலம் உள்ளூராட்சி ஆணையாளருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |